நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விதைச்சான்று பணிகள் ஆய்வு**

First Published : 11 Mar 2011 09:15:28 AM IST

திருவள்ளூர், மார்ச் 10: திருவள்ளூர் மாவட்டத்தில் தனியார் விதை விற்பனை நிலையங்களில் களப்பணியாளர்களுக்கு தரமான விதை உற்பத்தி, விநியோக கண்காணிப்பு போன்ற விஷயங்களில் வழிகாட்டும் பொருட்டு விதைச்சான்று இயக்குநர் (கோவை) கோபால கிருஷ்ணன் ஆய்வு மேற்கொண்டார்.

பெரும்பாக்கம் கிராமத்தில் உள்ள பச்சைப்பயறு கோஜிஜி 912 சான்று நிலை விதைப்பண்ணையில் ஆய்வு மேற்கொண்டு. பயறு வகை பயிர்களில் இரு மாதத்தில் விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைத்திட வாய்ப்புள்ளதால் அதனை அதிக அளவில் பயிரிட நடவடிக்கை மேற்கொள்ளும்படி அறிவுரை வழங்கினார்.

திருவள்ளூரில் உள்ள தனியார் விதை விற்பனை நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட அவர் விதை உரிமம், விவசாயிகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதா, விற்பனைப் பட்டியல் வழங்கப்படுகிறதா, அதில் விவசாயி கையொப்பம் பெறப்படுகிறதா, விலை விவரப் பலகை உள்ளதா என்பதைக் கேட்டறிந்தார்.

ஆய்வின்போது விதை விற்பனையாளர்களுக்கு பணி விதை மாதிரிகள் அனுப்புவதன் அவசியம் எடுத்துரைக்கப்பட்டது, வீரிய ஒட்டு காய்கறி விதைக் குவியல்களில் அதிக மாதிரிகள் எடுக்க விதை ஆய்வாளர்களுக்கு அவர் அறிவுரை வழங்கினார். விதைப் பரிசோதனை நிலையத்தில் பணி விதை மாதிரிகளின் தேர்ச்சித் திறன் பற்றியும் நிலையத்தில் உள்ள முளைப்புத்திறன் கண்டறியும் கருவிகள் பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது சென்னை விதை ஆய்வு துணை இயக்குநர், ஆர். சேகர், திருவள்ளூர் விதைச் சான்று உதவி இயக்குநர் எம். ராகவேந்திர ராவ் ஆகியோர் உடனிருந்தனர்.

**விலைவாசி உயர்வுக்கு ஏழைகளைக் காரணம் சொல்லாதீர்கள்**

First Published : 11 Mar 2011 01:24:33 AM IST




பிருந்தா காரத்

புது தில்லி, மார்ச் 10: விலைவாசி உயர்வுக்கு ஏழை மக்கள்தான் காரணம் என்று கூறுவதை ஏற்க முடியாது. அதிகரித்து வரும் விலைவாசியை சகித்துக் கொண்டு வாழ்வதற்கு மக்கள் பழகிக் கொள்ள வேண்டும் என்று சொல்வதையும் ஏற்க முடியாது என்று கம்யூனிஸ்ட் கட்சிகள் கூறின.

2011-12-ம் நிதி ஆண்டுக்கான பட்ஜெட் மீதான விவாதம் மாநிலங்களவையில் வியாழக்கிழமை நடைபெற்றது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பிருந்தா காரத் விவாதத்தில் பேசியதாவது:

ஏழை மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்ததால் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்ந்துள்ளது என்று கூறுவதை ஏற்கவே முடியாது. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க மத்திய அரசு செயல்படுத்தும் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்துடன் தொடர்பு படுத்துவதையும் ஏற்க முடியாது. அரசின் இத்தகைய வாதத்தை எந்த வகையில் சேர்ப்பது என்றே தெரியவில்லை. நாட்டில் ஊட்டச் சத்து குறைபாட்டால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வரும் நிலையில் அரசின் கூற்றை எதில் சேர்ப்பது?

2008-ம் ஆண்டில் சர்வதேச அளவில் பொருள்களின் விலை உயர்ந்த போது அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜார்ஜ் புஷ் இதே கருத்தை கூறினார்.

ஏழை மக்கள் அதிகம் சாப்பிடுவதால் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்ந்துள்ளது என்று நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி இனியேனும் கூறாமல் இருக்க வேண்டும். பிப்ரவரி 26-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் நாட்டின் பணவீக்கம் 9.52 சதவீதமாக உள்ளது. இது குறைவு என நினைத்தாலும் ஏழை மக்களுக்கு மிகவும் சுமையானதுதான்.

பொருள்களின் விலை உயர்வானது சட்டத்திற்குள்படாத வரி விதிப்பு என்று அவர் சுட்டிக் காட்டினார். அரசு இப்போது போட்டுள்ள பட்ஜெட், பணக்காரர்களுக்கும், நிறுவனங்களுக்குமானது. மறைமுக வரி விதிப்பு மூலம் ஏழை மற்றும் பணக்காரர்களுக்கு சம விகிதத்தில் வரி விதிக்கப்பட்டுள்ளது. மருத்துவ பரிசோதனை சேவைக்கு 5 சதவீத சேவை வரி விதிக்கப்பட்டுள்ளது மிகவும் மோசமானது. இந்த பட்ஜெட் பள்ளி மாணவர்களையும் விட்டுவைக்கவில்லை. ஸ்டேஷனரி பொருள்களின் விலை அதிகரிக்க வழி வகுத்துள்ளது. ரூ. 5 லட்சம் கோடி வரிச் சலுகையாக தொழிலதிபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் இந்த பட்ஜெட் முதலாளித்துவ நோக்கிலானது. பணக்காரர்களுக்கு மட்டுமே நன்மை செய்யும் வகையில் ஒரு பிரிவுக்கு சாதகமாக உள்ளது. மனித வளத்தை உரிய வகையில் பயன்படுத்துவதாக அரசின் கொள்கைகள் இல்லை. மேலும் அதிகரித்து வரும் பெட்ரோல் விலையேற்றம் ஏழை மக்களை வெகுவாக பாதித்து வருகிறது. விலை உயர்வால் அரசின் வரி வருவாய் பெட்ரோலியப் பொருள்கள் மூலம் ரூ. 1,11,000 கோடியிலிருந்து வரும் நிதி ஆண்டில் ரூ. 1,35,000 கோடி அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ. 51.64. இதில் வரி மட்டும் 48 சதவீதமாகும். டீசல் மீதான வரி 32 சதவீதமாக உள்ளது. இதிலிருந்தே மத்திய அரசு மக்கள் விரோத கொள்கைகளை கடைப்பிடிப்பது தெள்ளத் தெளிவாக புலனாகிறது. பெட்ரோல் மீதான கட்டுப்பாட்டைத் தளர்த்தியதுதான் பணவீக்க உயர்வுக்கு முக்கியக் காரணமாகும்.

மானியத்தை ரொக்கமாக அளிப்பது என்ற நடைமுறை பிரேஸில் உள்ளிட்ட நாடுகளில் கூடுதல் சலுகையாகத்தான் அளிக்கப்படுகிறது. எனவே ஏற்கெனவே அளிக்கப்படும் மானியத்தை நிறுத்தக் கூடாது. மேலும் அரசு அளிக்கும் மானிய உதவி ஏழை மக்களுக்குப் போய்ச் சேருகிறது என்பதை எவ்விதம் கண்காணிக்க முடியும்? அதற்கு எந்த வகையிலான நடைமுறையை அரசு பின்பற்றப் போகிறது?
உரம் மீதான மானியத்தைக் குறைத்ததால் மண் ஊட்டச் சத்துக்களின் விலை அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

இதேபோல மண்ணெண்ணெய், அரிசி உள்ளிட்ட பொருள்களுக்கு அளிக்கப்படும் மானியத்தை நேரடியாக வழங்கப் போவதாக அரசு அறிவித்துள்ளது. ஆனால் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்கள் பட்டியல் இரண்டு வகையாக உள்ளது. அங்கன்வாடி மையங்களில் பணியாற்றும் 50 லட்சம் பெண் பணியாளர்களின் மாத ஊதியம், ஓய்வூதியம் ஆகியவற்றை அரசு உடனடியாக நிர்ணயிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார் பிருந்தா காரத்.

பிகாரின் பொருளாதார கொள்கையை ஒத்ததாக மத்திய பட்ஜெட் உள்ளது என்று ஐக்கிய ஜனதா தள உறுப்பினர் என்.கே. சிங் கூறினார். வேளாண் துறைக்கான ஒதுக்கீடு அதிர்ச்சியளிப்பதாக உள்ளது. ஏற்கெனவே பல்வேறு மாநிலங்களில் அமல்படுத்தப்படும் நடைமுறைகளை மத்திய அரசு தனது பட்ஜெட்டில் அறிவித்துள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த பட்ஜெட்டில் வேளாண் துறை முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று பிஜு ஜனதா தள உறுப்பினர் சஷி பூஷண் பெஹரா கூறினார். விவசாயிகள் தற்கொலை அதிகரித்துவரும் நிலையில் அதைத் தடுப்பதற்கான எவ்வித கொள்கையும் பட்ஜெட்டில் இடம்பெறவேயில்லை என்றும் அவர் கூறினார்.

ஊழலை ஒழிப்பதற்கு நான்கு அம்ச திட்டங்களைக் கூறினார் சுயேச்சை உறுப்பினர் ராஜீவ் சந்திரசேகர். அதிகரித்து வரும் பணவீக்கம் கவலையளிப்பதாக உள்ளது என்று அதிமுக உறுப்பினர் ஏ. இளவரசன் சுட்டிக் காட்டினார்.

**நெற்பயிருக்கு உரமிடுவதற்கு முன்பாக பச்சை அட்டையை பயன்படுத்துங்கள்**

தே.சாலமன்

First Published : 10 Mar 2011 10:42:33 AM IST



செய்யாறு: நெல்லுக்கு தேவைப்படும் தழைச்சத்து பற்றாக்குறையைக் கண்டறியும் பச்சை அட்டையைப் பயன்படுத்தி உரமிடுவதன் மூலம் செலவை குறைக்கலாம் என செய்யாறு கோட்ட வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தெரிவித்துள்ளார்.

இந்த அட்டையில் வெளிர் பச்சை முதல் கரும்பச்சை வரையிலான 1 லிருந்து 6 வரை வெவ்வேறு வகையிலான வில்லைகள் உள்ளன. இந்த பச்சை நிறத்துடன் இலையின் வண்ணம் ஒப்பிடப்படுகிறது.

குறிப்பிட்ட பச்சை நிறத்துக்குக் கீழே இருக்குமானால் தழைச்சத்து பற்றாக்குறையினால் பயிர் பாதிக்கப்பட்டுள்ளதை அறியலாம். அதற்கு ஏற்ப தழைச்சத்தை இட வேண்டும். தழைச்சத்து நன்கு கிடைக்கும் போது பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் குறையும். பயிர் சாயாது. மகசூல் அதிகரிக்கும்.

பயன்படுத்தும் முறை:

நட்ட 15-ம் நாள் முதல் (நேரடி விதைப்பு என்றால் 21-ம் நாள் முதல்) கதிர் வெளிவரும் பருவம் வரை வாரம் ஒருமுறை பச்சை வண்ண அட்டைகளைப் பயன்படுத்த வேண்டும்.

சீரான பயிர் எண்ணிக்கையுள்ள வயலில் நோய் தாக்காத பத்து நெற்பயிரை அங்கொன்றும் இங்கொன்றுமாக தேர்வு செய்து, ஒவ்வொரு பயிரிலும் மிக உயரமான நன்கு விரிந்த இலை ஒன்றை தேர்ந்தெடுக்க வேண்டும். (பொதுவாக மேலிருந்து மூன்றாவது இலை).

வெள்ளைப் பொன்னிக்கு பச்சை வண்ண அட்டையிலுள்ள 3-ம் எண்ணுடனும், மற்ற ரகங்களுக்கு 4-ம் எண்ணுடனும் ஒப்பிட வேண்டும். தேர்ந்தெடுத்த இலையின் நடுப்பகுதியை கிள்ளாமல் பச்சை வண்ண அட்டையின் நிறங்களுடன் ஒப்பிட வேண்டும்.

இலையின் நிறம் இரண்டு நிறத்திற்கு இடையில் இருந்தால் இரண்டுக்கும் இடைப்பட்ட சராசரி மதிப்பை எடுத்துக் கொள்ள வேண்டும் (அதாவது 3.5 அல்லது 4.5).

இவ்வாறு மொத்தம் பத்து இலைகளில் ஒப்பிடுகையில் அதில் 5 முதல் 6 வரை இலைகளின் பச்சை நிறம் குறிப்பிட்ட பச்சை நிறத்திற்கு குறைவாக இருந்தால் எக்டருக்கு 35 கிலோ தழைச்சத்து இட வேண்டும் (பனி மற்றும் மழைக்காலத்தில் 30 கிலோ).

இலைகளின் நிறம் குறிப்பிட்ட பச்சை நிறத்துக்கும் அதிகமாக இருந்தால் தழைச்சத்து இடத் தேவையில்லை.

**கவனிக்க வேண்டியவை**

1. வண்ண அட்டையை பயன்படுத்தும் சமயம் சூரிய ஒளி இலையின் மேல் படாமல் உடல் நிழலைக் கொண்டு மறைத்துக் கொள்ள வேண்டும்.
2. காலை 8-10 மணி வரை அல்லது மாலை 3-5 மணி வரை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இலையின் பச்சை நிறத்தை ஒப்புமை செய்ய வேண்டும்.
3. ஒரே நபர் இந்த அளவை எடுப்பது சிறந்தது.

**நெல் வயலிலும் மீன் வளர்க்கலாம்**

எஸ்.சபேஷ்

First Published : 10 Mar 2011 10:40:58 AM IST



அரக்கோணம்: நெல் வயலில் மீன் வளர்த்து இரட்டிப்பு லாபம் பெறலாம் என தமிழக அரசு வேளாண் துறை நெமிலி வட்டார உதவி இயக்குநர் ஒய். முகமது முபாரக் தெரிவித்துள்ளார்.

நெல் வயலில் மீன் வளர்ப்பதால் குறைந்த பரப்புள்ள நிலத்திலேயே நமக்கு அதிக லாபம் கிடைக்கிறது. கூலி ஆட்களின் தேவை குறைகிறது. அறுவடை முடிந்த பின்னும் வருமானம் கிடைக்கிறது.

வயலை தயார் செய்தல்:

வட்ட வடிவ குழிகள் தோண்டி கரைகள் கட்ட வேண்டும். குளம் போன்று உருவாக்கிய பின் அதில் ஹெக்டேருக்கு 10 ஆயிரம் வரை மீன்குஞ்சுகளை விட வேண்டும். அவற்றிற்கு உணவாக அரிசி, உமி, புண்ணாக்கு ஆகியவற்றை மீனின் உடல் எடைக்கு ஏற்றவாறு அளிக்கலாம்.

நெல் ரகங்கள்:

மீன் வளர்ப்புக்கு ஏற்ற நெல் ரகங்களான பனிதன், துளசி, சி.ஆர்.260, 77 போன்ற நெல் ரகங்களை தேர்வு செய்ய வேண்டும்.

நெல் வயலில் மீன் வளர்ப்பு இரு முறைகளில் செய்யப்படுகிறது. 1. சம காலத்தில் இரண்டையும் வளர்த்தல். 2.சுழற்சி முறை வளர்ப்பு.

சமகால வளர்ப்பு முறை: 0.1 ஹெக்டேர் பரப்பளவு நிலமே போதுமானது. நெல் வயல்களில் மேக்ரோ பிராக்சியம் ரோசன் பெர்ஜி என்ற இறால் வகைகளை வளர்க்கலாம். மீன்களைப் போலன்றி இறால் வளர்ப்புக்கு 4 மாதத்துக்கு, 12 செ.மீ. ஆழத்திற்கு சல்லடைத்தடுப்பு அமைத்து

பாதுகாக்க வேண்டும். நாற்று நட்டு வேர்பிடித்தபின் ஒரு ஹெக்டேருக்கு 2-3 செ.மீ. அளவுடைய ஆயிரம் குஞ்சுகளை விட வேண்டும்.

சுழற்சி முறை: இம்முறையில் மீன் மற்றும் நெல் அடுத்தடுத்து பயிர் செய்யப்படுகிறது. நெற்பயிரை அறுவடை செய்த பின் அவ்வயல் மீன் வளர்க்கும் குளமாக மாற்றப்படுகிறது. இம்முறையில் பயிர்களுக்கு களைக்கொல்லி மற்றும் பூச்சி கொல்லிகளைப் பயன்படுத்துதல் இயலும். அதோடு மீன்களுக்கு தேவையான அளவு 60 செ.மீ. வரை நீரின் ஆழத்தைப் பராமரிக்க இயலும்.

நெல் அறுவடை முடிந்த ஓரிரு வாரங்களில் வயலை மீன் வளர்ப்புக்குத் தயார் செய்ய வேண்டும். கெண்டை இன மீன் வகைகள் இம்முறைக்கு மிகவும் ஏற்றவை. 2-3 செ.மீ. அளவுள்ள நுண்குஞ்சுகளாக இருப்பின் ஹெக்டேருக்கு 20 ஆயிரம் குஞ்சுகளும், விரல் அளவு குஞ்சுகளாக இருப்பின் ஹெக்டேருக்கு 6 ஆயிரம் குஞ்சுக்களும் விட வேண்டும்.

வண்டல் களிமண் மீன் மற்றும் இறால் வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றது. நல்ல மழை பெய்த பின் மீன் வளர்த்தல் நல்லது. காரணம் நீரின் உப்புத்தன்மை குறைந்திருக்கும்.

அறுவடை: 10 வாரங்களுக்குப் பிறகு மீனை அறுவடை செய்யலாம். மீன்களை கைகளால் பிடித்தோ அல்லது நீரை வடித்தோ அறுவடை செய்யலாம். பிடிக்கப்பட்ட இறால்களை ஐஸ் பெட்டிக்குள் வைத்து சந்தைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

**பேய்க்குளத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி**

First Published : 10 Mar 2011 09:15:44 AM IST

சாத்தான்குளம், மார்ச் 9:÷சாத்தான்குளம் அருகே உள்ள பேய்க்குளத்தில் விவசாயிகளுக்கு வேளாண்மைக் கருவிகள் பற்றிய செயல்முறை பயிற்சி நடைபெற்றது.

÷தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் பாலச்சந்தர் ஆலோசனைப்படி ஸ்ரீ வெங்கடேஸ்வரபுரத்தில் விவசாயிகளுக்கு 6 நாள்கள் பயிற்சி முகாம் நடைபெற்றது. ÷திருச்செந்தூர் வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் சுந்தர் வேளாண் இயந்திரங்கள் குறித்தும், தென்திருப்பேரை தோட்டக்கலைத் துறை அலுவலர் அல்லிராணி, திருச்செந்தூர் வேளாண் விற்பனைத்துறை விற்பனைப் பிரிவு மணிகண்டன், முனைஞ்சிப்பட்டி ஐஓபி மேலாளர் முருகன், சேரன்மகாதேவி இள நிலை பொறியாளர் ராஜகோபால், வேளா ண்மை ஆலோசகர் முகமதுஅலி ஆகியோர் விவசாயிகளுக்கு நெல் சாகுபடி, நடவு, பயிர்க்கடன், தானிய சேமிப்பு, விற்பனை குறித்து பயிற்சி வகுப்புகள் நடத்தினர்.

÷திருச்செந்தூர் இளநிலை பொறியாளர் மரியபாக்கியம், சேர்மராஜன், ஆறுமுகம், அங்கப்பன் ஆகியோர் நெல் சாகுபடி குறித்து கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரிக்கு விவசாயிகளை அழைத்துச் சென்று நேரடி செயல்முறை பயிற்சி வகுப் பு நடத்தினர்.

÷முகாம் நிறைவு நிகழ்ச்சிக்கு தூத்துக்குடி மாவட்ட செயற்பொறியாளர் பாலச்சந்தர் த லைமை வகித்தார். செங்குளம் ஆயக்கட்டு விவசாயிகள் சங்கத் தலைவர் முருகேசன் முன்னிலை வகித்தார்.

÷பயிற்சியில் கலந்து கொண்டு பயனடைந்த சுமார் 25 விவசாயிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. திருச்செந்தூர் இளநிலைப் பொறியாளர் லட்சுமிகாந்தன் நன்றி கூறினார்.

**வழிகாட்டும் "மிதவை விவசாயம்'**

First Published : 10 Mar 2011 12:00:00 AM IST



வங்கதேசத்தில் வெள்ளப்பகுதிகளில் செய்யப்படும் புதிய முறை விவசாயம்.

சிதம்பரம்: கனமழை, வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களின் காரணமாக தமிழக விவசாயிகள் அதிகளவு பொருளாதார பாதிப்புகளை சந்தித்து வருகின்றனர். குறிப்பாக கடலோரப் பகுதி தமிழகத்திலும், காவிரி பாசனப் பகுதிகளிலும் வெள்ளத்தினால் சிறு மற்றும் குறு விவசாயிகள் அதிகளவு பாதிக்கப்படுகின்றனர்.

இதே சூழலில் வங்கதேசத்தில் அடிக்கடி ஏற்படும் கனமழை, புயல், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களில் இருந்து பயிர்கள் பாதுகாக்க அங்குள்ள விவசாயிகள் புதிய முறையான மிதவை விவசாயத்தை மேற்கொள்கின்றனர். எனவே வெள்ளம் பாதிப்பு பகுதிகளில் உள்ள தமிழக விவசாயிகள் இந்த மிதவை விவசாய முறையை தெரிந்து கொண்டு பின்பற்றுவது அவசியமாகும்.

இதுகுறித்து அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை உதவிப் பேராசிரியர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்தது:

வங்கதேசத்தில் உள்ள பாசுதேவ்பூர் கிராமத்தில் அதிகளவு வேளாண் தொழிலாளர்கள் மிதவை வேளாண் சாகுபடிப் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு தங்களது உணவு தேவை மற்றும் குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து தேவையை நிறைவு செய்து வருகின்றனர். மிதவை விவசாயம் செய்ய தேவையான மிதவை படுக்கைகள் விவசாயிகளிடம் உள்ள வேளாண் இடுபொருள்களை கொண்டே தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தயாரிக்கும் முறை: முதலில் மூங்கில்களை நன்றாக சீவி ஒரு படுக்கை போல் தயார் செய்யப்படுகிறது. பின்னர் வைக்கோல் அல்லது ஆகாயத்தாமரை கழிவுகளின் மேல் போட்டு ஒரு படுக்கை போன்ற அமைப்பு உருவாக்கப்படுகிறது. இப்படுக்கையின் அளவு தண்ணீரில் கிடக்கும் காலத்தை ஒட்டியே அமைக்கப்படுகிறது.

சுமார் 20 முதல் 30 நாள்களில் தயார் செய்யப்படும் படுக்கையின் மேல் பயிர் சாகுபடிப் பணிகள் தொடங்கப்படுகிறது, விவசாயிகள் விதைகளை தூவியும், நாற்றங்கால் நடவு செய்யும் முறையை தங்களின் தேவைக்கேற்ப பின்பற்றுகின்றனர். இவ்வாறு மிதவை வேளாண்மையில் 20 வகை காய்கறிகள் வரை சாகுபடி செய்யலாம்.

வெண்டை, தக்காளி, கத்திரி, புடலை வகை காய்கறிகள், கொத்தமல்லி, பூசணிக்காய், முள்ளங்கி போன்றவற்றை எளிதாக சாகுபடி செய்யலாம். இதுதவிர நிலத்துக்கு உள்ளே விளையும் இஞ்சி, உருளை, மற்றும் மஞ்சள் சாகுபடியையும் மிதவை வேளாண் வாயிலாக மேற்கொள்ள முடியும். இவ்வாறு மிதவை படுக்கைகள் மூலம் விவசாயம் செய்யும் போது ரசாயான உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துவது கிடையாது.

குறிப்பாக 1988 மற்றும் 1998-ம் ஆண்டுகளில் வங்க தேசத்தை பெரும் அளவில் இயற்கை சீற்றங்கள் தாக்கியபோது மிதவை விவசாய படுக்கைகள் மேல் கூடாரம் அமைத்து இரண்டு மாதங்கள் வரை தங்கி தங்களது பொருள்களையும், கால்நடைகளையும் இவர்கள் பாதுகாத்துள்ளனர்.

சவால்கள்: மிதவை படுக்கைகள் தயார் செய்ய நீண்ட அளவு கொண்ட வைக்கோல்கள் தேவை. தற்போது குறுகிய கால குட்டை ரகங்களே அதிகளவு சாகுபடி செய்யப்படுவதால் மிதவை படுக்கைகள் தயார் செய்வது எளிதல்ல. ஆகாயத்தாமரை கொண்டு தயார் செய்யப்படும் சூழலில் கடல் தண்ணீர் வெள்ளத்துடன் கலக்கும் போது அவற்றின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படும்.
எனவே நீண்ட வைக்கோல் தரும் பாரம்பரிய நெல் ரகங்கள் வாயிலாகவே மிதவைப் படுக்கைகள் மற்றும் மிதவை விவசாய பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும் என்றார் ராஜ்பிரவீன்.

**அரசு நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வலியுறுத்தல்**

First Published : 10 Mar 2011 10:14:12 AM IST

தாராபுரம், மார்ச் 9: தாராபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அரசு நெல் கொள்முதல் நிலையங்களை அமைக்க வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

தாராபுரம் வட்டம், பழைய அமராவதி பாசனப் பகுதிகளில் 8 ஆயிரத்து 264 ஏக்கரிலும், புதிய அமராவதிப் பாசனப் பகுதிகளில் 9 ஆயிரத்து 629 ஏக்கரிலும் நெல் நடவு செய்யப்படும்.

பருவ மழை தாமதம் காரணமாக அமராவதி அணை கடந்த நவம்பரில் நிரம்பியது. அதற்குப் பின்னரே நெல் நாற்று விட்டு, நடவு செய்யப்பட்டது.

தற்போது நெல் அறுவடை மும்முரமாகியுள்ள நிலையில், கிராமப்புறப் பகுதிகளில் ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் பணியாற்ற கூலித் தொழிலாளர்கள் சென்று விட்டதால், நெல் அறுவடைக்கு ஆள்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால், இயந்திரம் மூலம் நெல் அறுவடை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு நெல் அறுவடை இயந்திரத்துக்கு ஒரு மணி நேரத்துக்கு ரூ.1,300 கட்டணம் வசூலிக்கப்பட்டது. ஆனால், நடப்பாண்டி ஒரு மணி நேரத்துக்கு ரூ.1,600 கட்டணம் வசூலிக்கப்படுவதாக கூறப்படுகிறது. இவ்வாறு உற்பத்தி செலவு அதிகரித்துள்ள நிலையில், நெல் கொள்முதல் விலை குறைந்து விட்டது. தனியார் வியாபாரிகள் 122 கிலோ நெல்லுக்கு கடந்த ஆண்டு ரூ.1,400 கொள்முதல் விலை கொடுத்தனர். ஆனால், நடப்பாண்டு 122 கிலோ நெல்லுக்கு ரூ.1,100 மட்டுமே தரப்படுகிறது.

எனவே, அரசு சார்பில் நெல் கொள்முதல் மையங்களை அமைத்து, விவசாயிகளிடமிருந்து அரசே நேரடியாக நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்க திருப்பூர் மாவட்டத் தலைவர் ஏ.காளிமுத்து கூறுகையில், நெல் சாகுபடி, அறுவடையில் உள்ள பிரச்னைகளைத் தீர்க்க அரசு உதவ வேண்டும்.

தாராபுரம், மூலனூர், கொளத்துப்பாளையம், கோவிந்தாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் அரசு நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்து, அரசே நெல்லை நேரடியாக கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க உதவ வேண்டும் என்றார்.

தினமலர்

**மஞ்சள் வேக வைக்க நவீன இயந்திரம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 11,2011,00:44 IST

பொங்கலூர் : பொங்கலூர் வட்டாரத்தில் கடந்தாண்டு 1,000 ஏக்கரில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. தற்போது அறுவடை சீசன் ஆரம்பித்துள்ளது.இதுவரை மஞ்சளை அண்டாவில் கொட்டி தண் ணீர் ஊற்றி வேக வைத்தனர். இம்முறையில், அண்டாவில் உள்ள தண்ணீர் கொதி நிலைக்கு வருவதற்கே கால் மணி நேரத்துக்கு மேலாகும். முழுவதுமாக வேக வைக்க அரை மணி நேரமாகும். ஒவ்வொரு முறையும் தண்ணீரை மாற்றுவதால், மீண்டும் மீண்டும் தண்ணீரை சூடுபடுத்த வேண்டி யிருந்தது. இதனால், அதிகளவில் விறகு தேவைப் பட்டதுடன், நேரமும் விரயமானது.தற்போது, மஞ்சள் வேக வைக்க, விவசாயிகள் நவீன இயந்திரங்களை பயன்படுத்த ஆரம்பித் துள்ளனர்.

இம்முறையில் நீராவி மூலம் வேக வைக்கப்படுகிறது. இந்த இயந்திரத்தின் அடியில், தீ மூட்டி, அதன் மேல் தொட்டியில் உள்ள தண்ணீர் நீராவியாக மாற்றப்படுகிறது. குழாய் வழியாக மஞ்சள் நிரப்பப்பட்ட பாத்திரங்களுக்கு நீராவி செலுத்தப்படுகிறது. ஐந்து நிமிட இடைவெளியில், மஞ்சள் நன்றாக வேக வைக்கப்படுகிறது.விவசாயிகள் கூறுகையில், "பழைய முறையில், ஒரு நாளைக்கு நான்கு டன் மஞ்சள் வேக வைப்பது கடினமாக இருக்கும். இந்த இயந்திரம் மூலம் ஒரு நாளைக்கு 10 டன் மஞ்சள் வேக வைக்கலாம். இதற்கு, குறைவான விறகு இருந்தால் போது மானது; ஓரிரு நாட்களில் வேலை முடிந்து விடு கிறது,' என்றனர்.

**சூரியகாந்தி சாகுபடி சரிந்தது**

பதிவு செய்த நாள் : மார்ச் 11,2011,00:43 IST

பொங்கலூர் : பொங்கலூர் வட்டாரத்தில் சூரியகாந்தி சாகுபடி செய்யும் பரப்பு சரிந்து வருகிறது.எண்ணெய் வித்துப் பயிரான சூரிய காந்தி, வெயில் காலத்தில் நன்கு வளரும் இயல்புடையது. அதிக மழை மற்றும் பனி காலம் சூரியகாந்திக்கு ஒத்துவராது; கார்த் திகை பட்டம்

சிறந்தது. விதைகளை நடவு செய்ததில் இருந்து 100 நாட்களில் அறு வடைக்கு வருகிறது. சூரியகாந்தி எண் ணெய்க்கு மார்க்கெட்டில் தேவை அதிகம் இருப்பதால், விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டு வந்தனர்.

ஆண்டுதோறும் பொங்கலூர் பகுதிக்கு உட்பட்ட பெரியாரியபட்டி, அலகுமலை, கவுண்டம்பாளையம், வேலம்பட்டி, தாயம் பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் நூற்றுக் கணக்கான ஏக்கரில் பயிர் செய்யப்பட்டு வந்தது. தற்போது, உப்புக்கரைப்பாளை யம், தாயம்பாளையம், வேலம்பட்டி போன்ற சில பகுதிகளில் மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது.நல்ல வருமானம் கிடைத்ததால், சூரிய காந்தியை இரு போகமும் பயிர் செய்தனர்.

பயிர் சுழற்சி முறையை கடைபிடிக்காமல், தொடர்ந்து பயிர் செய்ததால், மண்ணின் வளம் குன்றியது. இதனால், சில ஆண்டு களாக விளைச்சல் பாதிக்கப்பட்டது. சூரியகாந்தியை கிளிகளிடம் இருந்து பாது காப்பதே கடினமான பணி. சூரியகாந்தி சாகுபடியை அதிகரிக்க வேளாண் துறை சார்பில் மானியம் வழங்கியபோதிலும் சாகு படி பரப்பு அதிகரிக்கவில்லை. கிளித் தொல்லைக்கு பயந்தும், புதிய ரகங்களில் நோய் தாக்குதல் அதிகரித்த தாலும், சூரியகாந்தி சாகுபடி செய்வதை விவசாயிகள் குறைத்துள்ளனர்.

**விவசாயிகள் சங்க மாவட்ட செயற்குழு**

பதிவு செய்த நாள் : மார்ச் 11,2011,01:19 IST

கிருஷ்ணகிரி: தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயற்குழு கூட்டம் கிருஷ்ணகிரியில் நடந்தது. மாவட்ட தலைவர் லோகாபிராம் தலைமை வகித்தார். செயலாளர் சரவணன் முன்னிலை வகித்தார். செந்தில்குமார் வரவேற்றார். மாநில தலைவர் வெங்கடாஜலம் சங்கத்தின் செயல்பாடுகள் குறித்தும் கோரிக்கைகள் குறித்தும் பேசினார். "மஹாத்மா காந்தி வேலை உறுதியளிப்பு திட்டத்தை விவசாய பணிகளுக்கு பயன்படுத்த மத்திய மாநில அரசுகள் உத்தரவிடவேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வனப்பகுதி கிராமங்களில் புகுந்து விவசாய பயிர்களை நாசம் செய்யும் காட்டு பன்றிகளை அழிக்க உத்தரவு வழங்கவேண்டும்.

வேலூர் மாவட்டத்தில் விவசாயிகளின் டிராக்டர்களை ஜப்தி செய்ததை கண்டித்து இன்று வேலூரில் நடக்கும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் அதிக அளவில் கலந்து கொள்ள வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.
மாவட்ட பொருளாளர் கருணாமூர்த்தி, துணை தலைவர்கள் லட்சுமணகவுடு, செந்தில்குமார்,

துணை செயலாளர்கள் முருகன், சக்திவேல், ராமச்சந்திரன், மகளிர் அணி செயலாளர் ஜெயலட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர். பெரியண்ணன் நன்றி கூறினார்.

**பருத்தி விதைகள் கிடைக்காமல் விவசாயிகள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 10,2011,23:09 IST

தேனி : தேனி மாவட்டத்தில் 25 ஆண்டுகளுக்கு பிறகு பருத்தி சாகுபடி செய்ய ஆர்வம் காட்டும் விவசாயிகள் ஸ்ரீவில்லிபுத்தூர்-2, சுப்ரியா போன்ற ரகங்களின் விதைகள் கிடைக்காமல் தவித்து வருகின்றனர். தேனி மாவட்டம் பருத்தி சாகுபடியில் மாவட்ட அளவில் இரண்டாம் இடம் பெற்று இருந்தது. தேனியில் மட்டும் ஜின்னிங் மில்கள், ஸ்பின்னிங் மில்கள், பருத்தி ஆயில் மில்கள் நூற்றுக்கணக்கில் இருந்தன. இவற்றில் 25 ஆயிரம் பேர் வேலை செய்தனர். தேனி பருத்தி மார்க்கெட் மாநில அளவில் இரண்டாவது பெரிய மார்க்கெட்டாக இடம் பிடித்தது.

மழை குறைவு, பருத்தியில் நோய் தாக்குதல், விளைச்சல் சரிவு, விலை வீழ்ச்சி போன்ற காரணங்களால் மாவட்டத்தில் பருத்தி சாகுபடி குறைந்தது. விவசாயிகள் கரும்பு, மக்காச்சோள சாகுபடிக்கு மாறினர். இதனால் பருத்தியை நம்பிருந்த தொழிற்சாலைகள் மூடப்பட்டன. தொழிலாளர்கள் வேலை இழந்தனர். மாநில அளவில் புகழ்பெற்ற தேனி பருத்தி மார்க்கெட் மூடப்பட்டது. 25 ஆண்டுகளுக்கு பிறகு பருத்திக்கு மறுவாழ்வு காலம் தொடங்கி உள்ளது. ஒரு குவிண்டால் பருத்தி 5 ஆயிரம் ரூபாயை எட்டி உள்ளது. நோய் தாக்குதல் இல்லாத சாகுபடி முறைகள், நவீன பாசன முறைகள் கண்டறியப்பட்டுள்ளன.

புது ரக விதைகளால் விளைச்சலும் அதிகரிக்கிறது. எனவே விவசாயிகள் மீண்டும் பருத்தி சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். எனவே பருத்தி சாகுபடி பரப்பு அதிகரிக்க தொடங்கி உள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூர் 2, சுப்ரியா போன்ற பருத்தி விதைகளை விவசாயிகள் விரும்புகின்றனர். ஆனால் விவசாய விரிவாக்க மையங்களிலும் வெளிமார்க்கெட்டிலும் இந்த ரக விதைகள் கிடைக்கவில்லை.

ஆனால் மார்க்கெட்டில் வீரிய ரக விதைகள் எனக்கூறி பலரும் விதை விற்பனை செய்கின்றனர். இவற்றின் நம்பகத்தன்மையையும் உறுதிப்படுத்த முடியவில்லை. எனவே தரமான விதைகள் கிடைக்காமல் விவசாயிகள் தவிக்கின்றனர். இவர்களுக்கு தேவையான விதைகளை வழங்க விவசாயத்துறை முன்வர வேண்டும்.

**இறங்கு முகத்தில் பயறு, பருப்பு விலை மார்க்கெட் நிலவரம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 10,2011,23:05 IST

சிவகங்கை : துவரம் பருப்பு, உளுந்து வரத்து அதிகரிப்பால் சிவகங்கை மார்க்கெட்டில் கிலோவுக்கு ஐந்து ரூபாய் விலை குறைந்துள்ளது. மளிகை விலை நிலவரம்: 68 க்கு விற்ற (கிலோ) துவரம் பருப்பு - 65; 61 க்கு விற்ற 2வது ரகம் -58; 58 க்கு விற்ற தட்டபயறு- 56; 48 க்கு விற்ற 2வது ரகம் - 47; கடலை பருப்பு- 39; 2வது ரகம் - 36; 70 க்கு விற்ற உளுந்து - 65; 68க்கு விற்ற 2வது ரகம் - 63; வெள்ளை கொண்டை கடலை - 64; 2 வது ரகம் 56; சிகப்பு கொண்டைகடலை- 40; 2 வது ரகம் 33; 70 க்கு விற்ற பாசிபருப்பு - 68; 68க்கு விற்ற 2வது ரகம்- 69; 68க்கு விற்ற பாசிபயறு- 66; 60 க்கு விற்ற 2வது ரகம் - 59;

மொச்சை பயறு - 50; வெள்ளை மொச்சை -70; பட்டாணி- 24; வெள்ளை பட்டாணி- 28; மல்லி- 65; 2வது ரகம் - 56; 70 க்கு விற்ற புளி- 65; 80 க்கு விற்ற பழையபுளி - 78; பொரி கடலை - 42; வத்தல்- 60; 2வது ரகம்- 60; மலைப்பூண்டு- 200; தரைப்பூண்டு - 130; வெல்லம் - 32; கருப்பட்டி (வேம்பார்)- 84; 32க்கு விற்ற சர்க்கரை - 30; சோம்பு - 140; வெந்தயம் - 520; கசகசா - 280; சீரகம்- 180; கடுகு - 380; மிளகு - 280; மஞ்சள் - 180 ரூபாய்க்கு விற்றது.

அரிசி நிலவரம் (கிலோ): கல்சர் பொன்னி - 28; புதுசு 26; டீலக்ஸ் பொன்னி - 24; புதுசு 22; ஐ.ஆர்., 20 - 20; செல்லப்பொன்னி - 22; புதுசு 20; பொன்னி பச்சரிசி -30; ஐ.ஆர்., 20 பச்சரிசி- 22; இட்லி அரிசி- 25; கோதுமை- 24; சோளம் -16; கம்பு - 18; கேப்பை - 17; வரகரிசி -36 ரூபாய்க்கு விற்றது. நெல் வரத்து அதிகரித்தும் விலையில் மாற்றம் இல்லை.
எண்ணெய் (லிட்டரில்) நிலவரம்: கடலை எண்ணெய் - 84; பாமாயில் - 65; நல்லெண்ணெய் - 110, தேங்காய் எண்ணெய் - 120 ரூபாய்க்கு விற்றது.

**காய்கறி விலை குறைவு வெங்காயம் மாற்றம் இல்லை**

பதிவு செய்த நாள் : மார்ச் 10,2011,22:59 IST

காரைக்குடி : காரைக்குடி கணேசபுரம் வாரச்சந்தையில் காய்கறி விலை குறைந்தாலும், வெங்காயம் விலையில் மாற்றம் ஏதுமில்லை.
சந்தை விலை விபரம் (கிலோ): தக்காளி-10; கத்தரி-20; உருளை- 20; முள்ளங்கி-20; பீட்ரூட்- 20; சவ்சவ் (4)-10; கேரட்- 24; நூக்கல்- 20; அவரை-20; சின்னவெங்காயம்- 30; பெரிய வெங்காயம்-

24; பாகற்காய் (பெரியது)- 20; வெண்டி- 20; கோஸ்- 10; டர்னிப்- 20; முருங்கை (1)- 5; வாழைக்காய் (4)-5; இலை (4)-10; தண்டு- 5; வாழை பூ (1)- 10; காலிபிளவர் -10. கருணை- 20; சோயா பீன்ஸ்- 20; பட்டர் பீன்ஸ்- 30; பச்சை பட்டாணி- 30; எலுமிச்சை (5)-10 ரூபாய்.
பழங்கள்: ஆப்பிள்- 60; ஆரஞ்சு- 50; சப்போட்டா- 25; திராட்சை (சீட்லஸ்)- 80; பன்னீர் திராட்சை -50; தர்பூசனி (1)- 20; அண்ணாசி- 20 ரூபாய்.

**நெல் நடவு துவக்கம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 10,2011,23:03 IST

சேத்தூர் : தேவதானம்,சேத்தூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த மாதம் முதல் போக சாகுபடி முடிந்தது. தற்போது இரண்டாம் போக சாகுபடிக்காக நெல் நாற்று பணி நடந்து வருகிறது. சில இடங்களில் நடவு பணிக்கு ஆட்கள் கிடைக்காததால், விவசாயிகள் சிரமப்படுகின்றனர். சில கண்மாய்களில் தண்ணீர் இல்லாததால், கிணற்று பாசனத்தை நம்பி விவசாயிகள் நடவு பணியை மேற்கொண்டுள்ளனர்.

# உணவு பணவீக்கம் 9.52%–ஆக குறைந்தது



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*உருளைக்கிழங்கு, கோதுமை விலை குறைந்ததால், பிப்ரவரி 26–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் நாட்டில் உணவு பொருள் பணவீக்கம் 9.52 சதவீதமாக குறைந்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 10.39 சதவீதமாக இருந்தது. கடந்த மூன்று மாதங்களுக்குப் பிறகு உணவு பொருள் பணவீக்கம் ஒற்றை இலக்க அளவிற்கு குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

**பருப்பு வகைகள்**

*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில், உருளைக்கிழங்கு விலை 9 சதவீத அளவிற்கும், கோதுமை விலை 1.07*

*சதவீத அளவிற்கும் குறைந்துள்ளது. பருப்பு வகைகள் விலை 3.91 சதவீதம் குறைந்துள்ளது.*

*அதேசமயம், காய்கறி விலை 9.23 சதவீதம் உயர்ந்துள்ளது. குறிப்பாக, வெங்காயம் விலை 3.90 சதவீதம் அதிகரித்துள்ளது. அரிசி (1.16 சதவீதம்), பழங்கள் (18.75 சதவீதம்), பால் (8.42 சதவீதம்) ஆகியவற்றின் விலையும் உயர்ந்துள்ளது. அரிசி விலை 1.16 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில், முட்டை, மீன், இறைச்சி 15.38 சதவீதம் உயர்ந்துள்ளது.*

*உணவு அல்லாத பொருள்கள் விலை 29.85 சதவீதம் உயர்ந்துள்ளது. இவற்றுள் பெட்ரோல் விலை 23.14 சதவீதம் அதிகரித்துள்ளது.*

*மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்கம், சென்ற ஜனவரி மாதத்தில் 8.23 சதவீதமாக உள்ளது.*

**நம்பிக்கை**

*பிப்ரவரி 26–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பணவீக்கம் குறைந்ததையடுத்து, அம்மாதத்தில் பொது பணவீக்கம் சற்று குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மார்ச் மாதத்திற்குள் இது 7 சதவீதமாக குறையும் என மத்திய அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.*

*உற்பத்தி நன்றாக உள்ள நிலையிலும், உணவு பணவீக்கம் அதிகரித்து வருகிறது. தனிநபர் வருவாய் உயர்ந்து வருவதே இதற்கு காரணமாகும். இதனை கருத்தில் கொண்டு பணப்புழக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி, சென்ற ஓர் ஆண்டு காலத்தில், முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை ஏழு முறை உயர்த்தி உள்ளது. இதற்கு பலன் கிடைக்க தொடங்கி உள்ளது.*

## நேரடி வரி வசூல் 21% உயர்வு

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு நிதி ஆண்டின் முதல் 11 மாதங்களில் (ஏப்ரல் – பிப்ரவரி), நாட்டின் நிகர நேரடி வரி வசூல், சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 20.86 சதவீதம் அதிகரித்து ரூ.3.36 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.*

**மதிப்பீடு**

*சென்ற ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட்டில், நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில், நேரடி வரி வசூல் ரூ.4.30 லட்சம் கோடியாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டு இருந்தது. பொருளாதாரத்தில் ஏற்பட்டு வரும் வளர்ச்சியால், நேரடி வரி வசூல் இலக்கை ரூ.4.46 லட்சம் கோடியாக மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி உயர்த்தி உள்ளார். நடப்பு நிதி ஆண்டின் முதல் 11 மாதங்களில் இந்த இலக்கில் 75.34 சதவீதம் வசூலாகியுள்ளது. எனவே, நடப்பு நிதி ஆண்டில், நிர்ணயிக்கப்பட்ட இலக்கை காட்டிலும் வசூல் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*நேரடி வரி வசூலில், நிறுவன வரி வசூல் மற்றும் தனிநபர் வருமான வரி வசூல் அடங்கும். முதல் 11 மாதங்களில் நிறுவன வரி வசூல் 24.44 சதவீதம் அதிகரித்து ரூ.1.80 லட்சம் கோடியிலிருந்து ரூ.2.24 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. இதே காலத்தில் பங்கு பரிவர்த்தனை வரி வசூல் உள்ளிட்ட தனிநபர் வருமான வரி வசூல் 14.29 சதவீதம் அதிகரித்து ரூ.98,000 கோடியிலிருந்து ரூ.1.12 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. பங்கு பரிவர்த்தனை வரி வசூல் மட்டும் 1.72 சதவீதம் (ரூ.5,975 கோடி) உயர்ந்து ரூ.6,078 கோடியாக அதிகரித்துள்ளது.*

**பிப்ரவரி மாதத்தில்...**

*சென்ற பிப்ரவரி மாதத்தில் நேரடி வரி வசூல் ரூ.18,663 கோடியாக உள்ளது. இதில், நிறுவன வரி வசூல் 3.4 சதவீதம் உயர்ந்து ரூ.6,519 கோடியிலிருந்து ரூ.6,740 கோடியாக உயர்ந்துள்ளது. தனிநபர் வருமான வரி வசூல் ரூ.8,131 கோடியிலிருந்து 46.63 சதவீதம் அதிகரித்து ரூ.11,923 கோடியாக உயர்ந்துள்ளது.*

## கடந்த பிப்ரவரி மாதத்தில் புண்ணாக்கு ஏற்றுமதி 2 மடங்கு அதிகரிப்பு

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

**புதுடெல்லி**

*கடந்த பிப்ரவரி மாதத்தில், புண்ணாக்கு ஏற்றுமதி 7.04 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 3.29 லட்சம் டன்னாக இருந்தது. ஆக, ஏற்றுமதி இரண்டு மடங்கிற்கு மேல் உயர்ந்துள்ளது.*

**எண்ணெய் வித்துக்கள்**

*நிலக்கடலை, எள், ஆமணக்கு, சோயாபீன், கடுகு உள்ளிட்ட பல்வேறு எண்ணெய் வித்துக்களிலிருந்து எண்ணெய் எடுத்த பிறகு கிடைக்கும் புண்ணாக்கு கால்நடைத் தீவனமாகவும், விளைநிலங்களில் உரமாகவும் பயன்படுத்தப்படுகிறது. புண்ணாக்கு உற்பத்தியில் நம் நாடு முன்னிலை வகித்து வருகிறது.*

*பிப்ரவரி மாதத்தில் ஏற்றுமதியான 7.04 லட்சம் டன் புண்ணாக்கில் சோயா புண்ணாக்கின் அளவு மட்டும் 5.40 லட்சம் டன்னாகும். அடுத்து, கடுகு புண்ணாக்கு 1.48 லட்சம் டன்னும், ஆமணக்கு புண்ணாக்கு 13,110 டன்னும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கடலைப் புண்ணாக்கு ஏற்றுமதி 1,475 டன்னாக இருந்தது.*

*தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த பல நாடுகள் இந்தியாவிலிருந்து அதிக அளவில் புண்ணாக்கை இறக்குமதி செய்து வருகின்றன. அடுத்தபடியாக, மத்திய கிழக்கு நாடுகளுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. பிப்ரவரியில் தென்கிழக்கு ஆசியாவிற்கு மட்டும் 5.38 லட்சம் டன் புண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளுக்கு 1.11 லட்சம் டன்னும், ஐரோப்பிய நாடுகளுக்கு 53,605 டன்னும் ஏற்றுமதி ஆகியுள்ளது.*

**சமையல் எண்ணெய்**

*சமையல் எண்ணெய் மற்றும் தாவர எண்ணெய் வகைகளுக்கு நல்ல விலை கிடைத்து வருவதால் அரவை ஆலைகள் கடந்த ஐந்து மாதங்களாக எண்ணெய் உற்பத்தியை விறுவிறுப்புடன் மேற்கொண்டு வருகின்றன.*